பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆடி 04 வெள்ளிக்கிழமை (19-07-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 153

# முல்லை முகாம் மீது புலிகள் நேற்றுப் பெரும் தாக்குதல்!

## மிகப் பெரிய தாக்குதல் என வர்ணனை

இராணுவ முகாம் ஒன்றின் மீது இவ்வளவு பெரிய தாக்குதல் ஒன்றை விடுதலைப் புலிகள் இதுவரை நடத்தியதில்லை என்று முல்லைத்தீவு முகாம் தாக்குதல் குறித்து இந்திய வானொலி தெரிவித்தது.

## கடல், தரை என இருமுனைகளிலும் பல்லாயிரக்கணக்கானோர் நடத்தினர்

கொழும்பு, ஜூலை 19

**முல்லைத்தீவு இராணுவ முகாம் மீது நேற்று அதிகாலை 1.30 மணியளவில் விடுதலைப் புலிகள் மிகப்பெரும் தாக்குதல் ஒன்றை ஆரம்பித்தனர்.**

**கடல், தரை ஆகிய இரு முனைகள் ஊடாக ஆயிரக்கணக்கில் புலிகள் ஊடுருவி இந்தத் தாக்குதலை ஆரம்பித்ததாக அறிவிக்கப்பட்டது.**

சுமார் 4 ஆயிரம் முதல் ஐயாயிரம் புலிகள் முகாமின் வடக்கு மற்றும் தென் முனைகளில் பாதுகாப்பு அரண்களை உடைத்துக் கொண்டு ஊடுருவினர் என்றும்

மற்றுமொரு குழு முகாமில் உள்ள படையினருக்கு கடல் வழியாக அனுப்பப்படும் மேலதிக படையினரைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டது என்றும் இந்திய வானொலி அறிவித்தது.

மிக நுணுக்கமான, திட்டமிடப்பட்ட துணிகரத் தாக்குதல் ஒன்றை புலிகள் வெற்றிகரமாக நடத்தியுள்ளனர் என்று ஏ. எவ். பி., ரோய்ட்டர் செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன.

தாக்குதல் நடந்த சமயம் சுமார் இரண்டாயிரம் படைச் சிப்பாய்கள் அந்த முகாமில் இருந்தனர்.

அந்த இரண்டாயிரம் சிப்பாய்களின் கதி என்னவா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நூற்றுக்கணக்கானோர் உயிரிழப்பு!

முல்லைத்தீவு முகாம் மீது நேற்று புலிகள்நடத்தியதாக்குதலில் இராணுவம் மற்றும் போராளிகள் தரப்பில் நூற்றுக் கணக்கானோர் உயிரிழந்ததாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இத்தாக்குதலில் நூறு படையினர் இறந்தோ அல்லது காயமடைந்தோ இருக்கலாம் என கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும் படையினர் தரப்பில் நானூறு பேர்வரை கொல்லப்பட்டதாக முதலில் கிடைத்த ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்ததாக இந்திய வானொலி அறிவித்தது.

ஆனால் இறுதியாகக் கிடைத்த தகவல்களின்படி, புலிகளின் வானொலிச் செய்தியில் இத்தாக்குதலில் 150க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும் —

புலிகள் தரப்பில் 34 பேர் வரை உயிரிழந்தனர் என்றும் —

அறிவிக்கப்பட்டதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

படகுகள் மூலமாக வந்த விடுதலைப் புலிகளில் 16 பேரைக் கடற்படையினர் அவர்களின் படகுகளுடன் மூழ்கடித்தனர் என்று கடற்படை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இத்தாக்குதலின் போது புலிகளுக்கும் பேரிழப்பு ஏற்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது என்று கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

முல்லைத்தீவு முகாமுடனான தொலைத்தொடர்பு வசதிகள் இழக்கப்பட்டுவிட்டதால் இழப்புகள் மற்றும் யுத்த நிலைமைகள் பற்றிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பெருமளவு ஆயுதங்கள் புலிகள் வசம்?

முல்லைத்தீவு மூகாம் ஆயுதக் கிடங்கிலிருந்து — மிகப் பெறுமதியான — உயர்ரக ஆயுதங்களை விடுதலைப் புலிகள் சூறையாடியிருக்கலாம் என்று செய்தியாளர்கள் குறிப்பிட்டனர்.

நேற்று முன்னிரவில் கிடைத்த செய்திகளின் படி— முல்லைத்தீவு தளத்தின் ஆயுதக் கிடங்கிலிருந்து ஆட்டிலறிகள், தானியங்கித் துப்பாக்கிகள், வெடிமருந்துகள், கிரனேட்டுகள் ஆகியவற்றையும் முகாமிலிருந்த வாகனங்கள் மற்றும் ஏராளமான கருவிகள், யுத்த தளபாடங்கள் போன்றவற்றையும் விடுதலைப் புலிகள் எடுத்துச் சென்றனர் என்றும் —

பின்னர் முகாமை நெருப்பு வைத்துக் கொளுத்தினர் என்றும்—

இராணுவ அதிகாரிகள் தெரிவித்ததாக ஏ. எவ். பி. செய்திகளை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

முல்லைத்தீவு முகாமை முற்றாகத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாவிட்டாலும் அங்குள்ள பெரிய ஆயுதசாலையில் குவிந்து கிடக்கும் ஆயுதங்களை அகற்ற புலிகள் முயல்வர் என இராணுவ ஆய்வாளர்கள் கூறுவதாக பி. பி. ஸி. அறிவித்தது.

முகாமிலிருந்த ஆயுதங்களில் ஒருதொகுதி லொறிகள் மூலமாக அல்லது கடல்வழியாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்று இராணுவத் தகவல்களை மேற்கோள் காட்டி சிங்கள பி. பி. ஸிக்கு இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்தார்

## மருத்துவமனைகள் தயார் நிலை

முல்லைத்தீவுத் தாக்குதலில் காயமுற்ற இராணுவச் சிப்பாய்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய இடங்களில் அமைந்துள்ள மருத்துவ மனைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்ததாக இந்திய வானொலி நேற்றிரவு அறிவித்தது.

தாக்குதலுக்கு இலக்கான முகாமை மீண்டும் ஸ்ரீலங்கா படைகள் தமது முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததையடுத்து, காயமுற்ற படையினருக்கு சிகிச்சையளிக்கும் வேலைகள் முடுக்கிவிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

## ரோந்து சென்ற படை மீது திருமலையில் தாக்குதல்

### ஓர் அதிகாரி 7 படையினர் பலி

கொழும்பு, ஜூலை 19

திருகோணமலை துறைமுகத்துக்கு அண்மையில் உள்ள மீகங்கொடல்ல வீதியில் காவல் ரோந்தில் சென்றுகொண்டிருந்த படையினர் மீது நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஓர் அதிகாரியும் 7 படையினரும் கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல் குறித்த மேலதிக விவரங்கள் அறிவிக்கப்படவில்லை. (இ-3)

## 8 படையினர் நேற்று மட்டக்களப்பில் பலி

### புலிபாய்ந்த கல்லில் மோதல்

'பொங்கும் அலைகள்' இரண்டாம் கட்ட இராணுவ நடவடிக்கை மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சித்தாண்டி, கிரான் ஆகிய பகுதிகளிலிருந்து நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னேறி வரும் துருப்பினர் நேற்றுக் காலை 7 மணியளவில் புலிபாய்ந்த கல் பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதலை எதிர்நோக்க வேண்டி வந்தது என்றும் —

இந்த மோதலில் 6 இராணுவத்தினரும், ஓர் அதிகாரியும் கொல்லப்பட்டனர், 18 இராணுவத்தினர் காயமடைந்தனர் என்றும் — இராணுவ நடவடிக்கை தொடர்ந்து நடக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

'பொங்கும் அலைகள்' முதலாம் கட்ட இராணுவ நடவடிக்கை வாகரையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது தெரிந்ததே. முதலாம் கட்ட இராணுவ நடவடிக்கை கடந்த ஞாயிறன்று பூர்த்தி அடைந்திருந்தது. (இ-3)

## பஸ் மீது துப்பாக்கிச் சூடு மின் இணைப்புகள் தகர்ப்பு

### அநுராதபுரத்தில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 19

அநுராதபுரம் மாவட்டம், ஹெப்பிட்டிக்கொலாவ என்னும் இடத்தில் போக்குவரத்துச் சபை டிப்போவுக்குச் சொந்தமான பஸ் ஒன்றின் மீதும் வாகனம் ஒன்றின் மீதும் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் டிப்போ ஊழியர் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் நால்வரைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் அதி சக்தி வாய்ந்த மின்சார இணைப்புக்களும் அங்கு குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. (இ-3-4)

## புலிகளுக்கு தகவலாம் ஊர்காவலர்கள் கைது

கொழும்பு, ஜூலை 19

புலிகளுக்குத் தகவல் கொடுத்ததாக இரு ஊர்காவல்படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர் என 'தினமின' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது

வேட்டைக்குச் செல்வது போல வில்பத்துக் காட்டுக்குச் சென்று வரும் போது அங்கு வைத்து அவர்கள் புலிகளுக்குத் தகவல் கொடுத்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## சசிகலாவை தொடர்ந்து காவலில் வைக்க உத்தரவு

சென்னை, ஜூலை 19

அந்நிய செலவாணிமோசடி தொடர்பாக கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும் திருமதி சசிகலா நடராஜனை அடுத்த மாதம் முதலாம் திகதி வரை காவலில் வைக்குமாறு பொருளாதாரக் குற்றங்களை விசா

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை ஆசிரியர் சங்கம்

(ப. இ. 984) யாழ். மாவட்டக் கிளை

## வடமாகாண ஆசிரியர் சங்கம்

10/1, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

### முக்கிய அறிவித்தல்

எமது சங்க அங்கத்தவர்கள் தங்களது தற்போதைய பாடசாலைகளின் முகவரிகளையும், தமது சொந்த முகவரிகளையும் உடன் அறியத்தரவும்.

புதிய அங்கத்தவர்களாகச் சேரவிரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.

த. தேவராஜா
பொதுச் செயலாளர்

கொக்குவில் இந்துக் கல்லூரி.
கொக்குவில்.
(41844)


## விக்னா கல்வி நிறுவனம்

52 ஸ்ரான்லி றோட், யாழ்.

OL

DAY CLASS [8 30-TO 2-30]
புதிய பிரிவு 22 – 7 – 96
EVENING CLASS [3 00 TO-4.30]
புதிய இரண்டாவது பிரிவு
22 – 7 – 96
SAT, SUN CLASS [8.30-TO-2.30]
புதிய பிரிவு 20 – 7 – 96
ஆண்டு 10, 9, 8, 7, 6
புதிய பிரிவு 22 – 7 – 96
[3.00-TO-4.30]

எமது தனித்துவம் வாய்ந்த
ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்
(C – 2633)



COMMERCIAL BANK

## இதோ!

அறிமுகப்படுத்தப்பட்ட நாளிலிருந்து
வாடிக்கையாளரிடம் பிரபல்யம் பெற்றுவரும்

## கொமர்ஷல் வங்கியின்
### புதிய சேமிப்புத் திட்டம்
### Progressive Saver Account

இத்திட்டம் தொடர்ச்சியாகச் சேமிப்பினை மேற்கொள்ளும் சேமிப்பாளரின் நன்மைகருதி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது சாதாரண சேமிப்புக் கணக்கினையொத்த அம்சங்களையும் விதிமுறைகளையும் கொண்டு கீழ் தரப்பட்ட மேலதிகமான விசேட அம்சங்களுடன் அறிமுகம் செய்யப்படுகின்றது.

1. இக்கணக்கினை ஆரம்பிப்பதற்குரிய ஆகக் குறைந்த தொகை ரூபா **5000** ஆகும். மேலதிக வைப்புக்களைச் செய்வதற்கு எந்தவித கட்டுப்பாடும் கிடையாது.
2. கணக்கினுடைய நாளாந்த நிலுவைக்கு சேமிப்புக் கணக்குக்குரிய வட்டி விகிதத்தில் வட்டி கணக்கிடப்பட்டு மாதமுடிவில் வட்டி கணக்கில் வரவு வைக்கப்படும்.
3. i) ஆகக் குறைந்த நிலுவையாக ரூபா ஐயாயிரமும்,
   ii) குறிப்பிட்ட காலாண்டுப் பகுதியில் மீளப்பெறுகை நடைபெறாமலும் உள்ள கணக்குகள், முன்னைய காலாண்டில் உழைத்த வட்டியில் 25% மாதாந்த வட்டிக்கு மேலதிகமான வெகுமதியாக (Bonus) பெற்றுக்கொள்ளும்.
4. இம் மேலதிக வெகுமதி தொடர்ந்து வரும் காலாண்டின் தொடக்கத்தில் கணக்குக்கு வரவு வைக்கப்படும்.
5. i) ஏதாவதொரு காலாண்டில் கணக்கின் ஆகக் குறைந்த நிலுவை ரூபா **5000** ற்குக் குறைந்தாலோ

   அல்லது

   ii) மீளப்பெறுகை நடைபெற்றாலோ அக்காலாண்டுப் பகுதியில் அக்கணக்கு வெகுமதியை இழக்கும். தொடர்ந்து வரும் காலாண்டுப் பகுதியில் மேற் சொல்லப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் கணக்குகள் அக்குறிப்பிட்ட காலாண்டுப் பகுதிக்குரிய வெகுமதிக்கு (Bonus) உரித்தாகும்.
6. இக்கணக்கில் உள்ள நிலுவைகள் கடன்களுக்குப் பொறுப்பாக வைக்கப்படலாம். கடனுக்குரிய வட்டி வீதம் சாதாரண சேமிப்பு நிதியை பிணையாக வைப்பதற்குரிய மாதிரியே அமையும்.
7. மீளப் பெறுகை செய்வதற்கு எந்தவிதமான கட்டுப்பாடும் கிடையாது. ஆனால் வெகுமதி இல்லாமல் போகும்.

**Minimum Diposit Rs. 5000/-**
**Monthly Savings Interest on Daily Balances**
**25% Quarterly Bonus on the earned interest.**

Welcome! Save! Progress.

(சி/2617)


## சிறையில் இருந்து வெற்றி

புதுடில்லி, ஜூலை 19

பம்பாய் குண்டு வெடிப்பில் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் மத்திய அமைச்சர் கல்பனாத்ராய் சிறையில் இருந்து கொண்டு கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார்.

நேற்று முன்தினம் அவர் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது, சிறையில் விசாரிக்கப்பட்ட விதமும், நடத்தப்பட்ட விதமும் தற்கொலை செய்யும் எண்ணத்தைக் கூட தமக்கு உருவாக்கியது என்று கூறினார். (இ-3)

## நூலகங்கள் இயங்க முடியாத நிலையில்

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ். மாநகர சபையின் சுண்டுக்குளி, நாவாந்துறை, கச்சேரியடி (வை. எம். சீ. ஏ.) கிளை நூலகங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

இந்நூலகங்களின் அங்கத்தவர்கள் தாம் முன்னர் இரவல் வாங்கிய புத்தகங்களை நல்லூர் கிளை நூலகத்தில் ஒப்படைப்பதன் மூலம் அங்கத்துவத்தை புதுப்பித்து கொள்ள முடியுமென்று யாழ். மாநகர சபையின் பிரதம நூலகர் தெரிவித்துள்ளார்.

மாநகர சபையின் 6 கிளை நூலகங்களில் நல்லூர், வண்ணார்பண்ணை, குருநகர், நாவலர் மண்டபம் ஆகிய நான்கு நூலகங்களே தற்போது செயல்படுகின்றன.

இவற்றிலும் இரவல் வழங்கும் பகுதி இன்னமும் செயல்படத் தொடங்கவில்லை.

கணக்கெடுப்பு வேலைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதால் அவை முடிந்ததும் இரவல் வழங்கும் பகுதி செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-4)

## பஸ் மூலம் தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 19

கோப்பாய், அச்சுவேலி, மற்றும் வடமராட்சி தபாலகங்களுக்கு இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களில் தபால் பொதிகளை அனுப்புவதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

இதுவரை இப்பகுதிகளுக்கு தபாலோடிகள் மூலமாகவே தபால்பொதிகள் அனுப்பப்பட்டு வந்தன

தீவுப் பகுதி, தென்மராட்சி, உரும்பிராய் தபாலகங்களுக்கு ஏற்கனவே போக்குவரத்துச் சபை பஸ்கள் மூலம் தபால் பொதிகள் அனுப்பிவைக்கப்பட்டு வருவதாகவும்—

பஸ் சேவை சுன்னாகம் பகுதிக்கு விஸ்தரிக்கப்பட்டதும் சுன்னாகம் மல்லாகத்துக்கும் இவ்வாறு தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்படுமென்றும் யாழ். பிரதம தபாலதிபர் தெரிவித்தார். (இ 4)

## கிரனேட் வீச்சில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

வீட்டினுள் படுத்திருந்தவர், நித்திரை வேளையில் கிரனேட் தாக்குதலுக்கு உள்ளாகி காயமடைந்தார்.

யாழ்ப்பாணம் மவுண்ட் காமல் வீதியில் நேற்று முன்தினமிரவு 11. 30 மணி அளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இரவுவேளை இனந்தெரியாத நபர்களால் வீட்டினுள் கிரனேட் வீசப்பட்டதாக காயமடைந்தவரால் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## கிளிநொச்சியில் குடியிருப்பு நிறுவ ரூ. 30 லட்சம் தேவை

கொழும்பு, ஜூலை 19

குடாநாட்டிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்து வந்தவர்கள் இன்னமும் பாடசாலைகளிலும், தொண்டு நிறுவனங்கள் நிறுவிய தற்காலிக கொட்டில்களிலும் தான் நெரிசல்களுக்கும், நெருக்கடிகளுக்கும் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இம்மக்களுக்கு குடியிருப்புக்களை அமைத்துக் கொடுக்க கிளிநொச்சி அரச அதிபர் முப்பது லட்சம் ரூபாவை அரச அதிகாரிகளிடம் கேட்டுள்ளார். (இ-3)

## மரண அறிவித்தல்கள்

### அருள்நந்தி தவேந்திரன்

அருள்நந்தி தவேந்திரன் (பட்டயக் கணக்காளர்) காலமானார். இவர் இந்திராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற K. S. அருள்நந்தி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற N. A. இராசரத்தினம் — மீனம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், அஞ்சலி, ரவி ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்றவர்களான மகேந்திரராசா, கமலாசனி, மங்களதேவி ஆகியோரினதும் மற்றும் மணி, Dr. புவீந்திரன், சற்குணதேவி, சித்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற திருவாதவூரர், கிருகலக்ஷ்மி, Dr. மகாதேவா, சறோஜினி, நடராஜசுந்தரம், சுந்தரி பாலசுப்பிரமணியம், ஆழ்வாப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 16 - 07 - 96 இல் லொஸ் என்ஜல்ஸில் நடைபெற்றன.

தகவல்:
ம. திருவாதவூரர்
(சகோதரி)

முகவரி:
நெய்தலங்கானல்,
கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

14, பாம்குறூவ்
கொழும்பு -3.
(41859)

### திருமதி சிவக்கொழுந்து சங்கரப்பிள்ளை

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சிவக்கொழுந்து சங்கரப்பிள்ளை 26 - 06 - 96 அன்று கோணாவில் கிளிநொச்சியில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும், சிவதாசன் (சுவிஸ்), பாஸ்கரதேவி, சரஸ்பதி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி விஜயலட்சுமி (தேவி), சிவதாசன், பத்மநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் வேணுஜா, வேணுகோபன், வேணுகாந்தன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், பொன்னம்பலத்தின் (முன்னாள் பத்திரிகை விநியோகத்தர்), அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27 - 06 - 96 பிற்பகல் 2 மணியளவில் யூனியன் குளம் மயானத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
ம. பத்மநாதன்
(மருமகன்)

''கேணிக்கரை''
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
(41852)

### வயித்திலிங்கம் நடேசலிங்கம்

வயித்திலிங்கம் நடேசலிங்கம் மலேசியாவில் 11 – 7 -96 இல் காலமானார். அன்னார் மூளாய் காலஞ்சென்ற வயித்திலிங்கம் தம்பதியின் மூத்த புதல்வரும், தெல்லிப்பளையைச் சேர்ந்த நெல்லிநாயகியின் அன்புக் கணவரும், ஜெயசீலன், ஜெயந்தி, சாந்தி ஆகியோரின் தகப்பனாரும், திரு. ஜோதி, திருமதி ஷோபா ஆகியோரின் மாமனாரும், செல்வலிங்கம் (கொழும்பு), ஞானலிங்கம் (கொழும்பு), காலஞ்சென்ற வாமதேவி, சோதிலிங்கம் (கொழும்பு), விமலாதேவி (மூளாய்), காலஞ்சென்ற கிருஷ்ணலிங்கம், விஜயதேவி (கனடா) ஆகியோரின் சகோதரரும், உரும்பராயைச் சேர்ந்த காலஞ்சென்ற Dr. வல்லிபுரத்தின் பேரனுமாவார். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மைத்துனர்

மூளாய் றோட்
சுழிபுரம்.
(41851)

### சின்னத்தம்பி நல்லதம்பி

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், புன்னாலைக் கட்டுவன் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட திரு. சின்னத்தம்பி நல்லதம்பி நேற்று 18 - 07 - 96 வியாழக்கிழமை காலை காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், செல்வி ந. துஷ்யந்தி (கிளிநொச்சி), திருமதி சிவலிங்கம் தமயந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், திரு. சிவலிங்கம் (கனடா) அவர்களின் அன்பு மாமனாரும், செல்வன் சி. ஸ்ரீபன் (கனடா) அவர்களின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18 – 07 - 96 வியாழக்கிழமை மாலை ஞானவைரவர் கோவிலடி தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் கிழக்கு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல் :
வே. தம்பிஐயா
(மைத்துனர்)
(41861)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ. விமான விபத்தில் 230 பேர் பலியாகினர்!

## நடுவானில் வெடித்து கடலில் வீழ்ந்தது

வாஷிங்டன், ஜூலை. 19
அமெரிக்க ரி. டபிள்யூ. ஏயர்லைன்ஸ் பயணிகள் விமானம் ஒன்று நேற்று அதிகாலை அட்லாண்டிக் கடலின் மேல் பறந்து கொண்டிருந்த சமயம் வெடித்துச் சிதறியது. அந்த விமானத்தில் பயணம் செய்த 230 பேரும் கொல்லப்பட்டனர்.

அமெரிக்க ரி. டபிள்யூ. ஏயர்லைன்ஸுக்கு சொந்தமான இந்த ஜம்போ ஜெட் விமானம் நியூயோர்க்கில் இருந்து பாரிஸுக்கு சென்று கொண்டிருந்த சமயம் வெடித்துச் சிதறியதாக தெரிவிக்கப்பட்டது.

குண்டு ஒன்று விமானத்துக்குள் வெடித்ததாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாக மூன் வந்த செய்திகள் தெரிவித்தன.

அட்லாண்டிக் கடலின் மேல் விமானம் பறந்து கொண்டிருந்த சமயம் குண்டு வெடித்ததாகவும் —

நெருப்புக் கோளங்கள் வானில் தெரிந்ததாகவும் — சி. என். எம். தொலைக்காட்சி சேவையினர் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவர்களின் சில சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் —

எவராவது உயிர் தப்பினார்களா என்பது தெரியவில்லை என்றும் — சி. என். எம். தெரிவித்தது.

இந்த நேரத்தில் இப்படியான பயங்கரவாத செயல் நடக்க நியாயமில்லை என்று வாஷிங்டன் உள்துறை அமைச்சு தெரிவித்தது.

இந்த விபத்துக் குறித்து அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளார்.

# நடராஜனுக்கு நெஞ்சுவலி; மருத்துவமனையில் சிகிச்சை

பத்திரிகையாளர்களைத் தாக்கியதாகக் கூறப்படும் வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டு வேலூர்ச் சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருககும் நடராஜன் நெஞ்சு வலிக்காக சென்னை பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர் மீண்டும் நேற்று முன் தினம் இரவு வேலூர்ச் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

நடராஜனின் துணைவியாரும், தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நெருங்கிய தோழியுமான சசிகலா அந்நிய செலாவணி மோசடி வழக்கில் விசாரணைக்காக விளக்கமறியலில் இருப்பது தெரிந்ததே. (உ)

## ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன்

# விசாரணைக்கு ஆஜராக அவகாசம் கோருகிறார்

ஜெயலலிதாவின் வளர்ப்பு மகனும் ''ஜெ. ஜெ. டி. வி.'' இயக்குனருமான வி. என். சுதாகரன், அமுலாக்கல் பிரிவின் முன்னாள் விசாரணைக்கு ஆஜராவதற்கு மேலும் ஒரு வார கால அவகாசம் கோரியுள்ளார்.

அந்நிய செலாவணி மோசடி தொடர்பான விசாரணைக்கு கடந்த, திங்கட்கிழமையன்று தங்கள் முன்னால் ஆஜராகுமாறு அமுலாக்கல் பிரிவு அவருக்கு உத்தரவிட்டிருந்தது.

ஆனால் அவர் அதற்கு மூன்று வார கால அவகாசம் வழங்குமாறு கோரியிருந்தார்.

எனினும் அக்கோரிக்கையை ஏற்க மறுத்த அமுலாக்கல் பிரிவினர் இவ்வாரமே அவர் ஆஜராக வேண்டும் எனக் கூறியிருந்தனர். (உ)

# சிறையில் வைத்து சசிகலா அதிகாரிகளால் விசாரணை

சென்னை, ஜூலை 19
அந்நிய செலாவணி மோசடி வழக்குகள் தொடர்பாக கைதாகி விளக்கமறியலில் இருக்கும் சசிகலாவை, அமுலாக்கல் பிரிவைச் சேர்ந்த பன்னிரண்டு அதிகாரிகள் நேற்று முன்தினம் சிறையில் வைத்து பல மணி நேரம் விசாரணை நடத்தி துளைத்தெடுத்தனர் என்று செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன.

இந்த விசாரணை நேற்றும் தொடரவிருந்ததாகவும் அவை தெரிவித்தன.

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நெருங்கிய தோழியான சசிகலாவுக்கு எதிராக பல கோடி ரூபா அந்நிய செலாவணி மோசடிக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருக்கின்றன என்பது தெரிந்ததே.

சசிகலாவின் பெயரில் அல்லது அவருக்கு ஆதரவானோரின் பெயரில் வாங்கப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் குறித்து நேற்று முன்தினம் நடந்த விசாரணைகளின்போது அமுலாக்கல் பிரிவு அதிகாரிகள் சசிகலாவிடம் பல்வேறு கேள்விகளை எழுப்பியதாகக் கூறப்படுகின்றது. (உ-3)

## ரஷ்யாவின்

# பாதுகாப்பு அமைச்சராக டுயனோவ் நியமனம்

மணிலா, ஜூலை 19
ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சராக இகார் டுயனோவ் என்பவரை அதிபர் ஜெல்ட்ஸின் நியமித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் ரஷ்யப் படைகள் நிலை கொண்டிருந்த போது தளபதியாகப் பணியாற்றிய இவர், தற்போதைய ரஷ்ய பாதுகாப்புக்குழுத் தலைவர் அலெக்ஸாண்டர் லெபேட்டுக்கு மிக நெருக்கமானவர் என்று கூறப்படுகிறது.

அதிபர் யெல்ட்ஸின் தமது உடல் நிலை சீர்குலைந்து வரும் நிலையில் லெபேட் இராணுவப் புரட்சி நடத்தலாம் என்று அஞ்சி இகார் டுயனோவை பாதுகாப்பு அமைச்சராக நியமிக்க முதலில் திடமாக மறுத்ததாகவும் —

ஆனால் லெபேட் அவர்களின் கடுமையான அழுத்தத்துக்குப் பின்பே யெல்ட்ஸின் பணிந்ததாகவும்—

கிரெம்ளின் 'இரகசியத் தகவல்கள் தெரிவித்தன. (உ-3)

# ஜெயலலிதா சட்டமன்ற உறுப்பினராக பதவி வகித்தது சட்ட ரீதியானதா?

## சுப்பிரமணியசுவாமியின் மனு விசாரணைக்கு வருகிறது

தமிழக முதலமைச்சராக இருந்த சமயம் செல்வி ஜெயலலிதா சட்ட மன்ற உறுப்பினராக இருக்கும் தகுதியை இழந்திருந்தார் என்று உத்தரவிடக்கோரி அவ்வேளையில் ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி தாக்கல் செய்திருந்த மனு மீதான தனது விசாரணையை தேர்தல் ஆணையம் எதிர் வரும் 31 ஆம் திகதி நடத்தவிருக்கின்றது.

இந்த விசாரணைக்குச் சமுகமளிக்கும்படி மனுதார் சுப்பிரமணிய சுவாமிக்கும் எதிர் மனுதார் ஜெயலலிதாவுக்கும் தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியிருக்கின்றது.

ஜெயலலிதா தாம் முதலமைச்சராக இருந்த சமயம், தமது செல்வாக்கைப் பயன்படுத்தி தாம் பங்குதாரராக இருக்கும் ஜெயா பப்ளிக்கேஷன் ஸுக்கு தமிழக அரசின் பாடசாலைப் புத்தகங்கள் அச்சிடும் ஒப்பந்தத்தை வழங்கினார் என்றும்—

அரசுடன் நிதி ஒப்பந்தம் செய்து கொண்ட ஒருவர் சட்ட மன்ற உறுப்பினராக இருப்பதற்குத் தகுதியற்றவர் என்றும்—

அதனடிப்படையில் அவர் சட்ட மன்ற உறுப்பினராக இருப்பது செல்லுபடியற்றது என்றும் தேர்தல் ஆணையம் உத்தரவிட வேண்டும் என்றும் — இம்மனுவில் சுப்பிரமணிய சுவாமி கோரியிருந்தார்.

ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த சமயமே இம் மனு மீதான விசாரணையை பிரதம தேர்தல் ஆணையாளர் ரி. என். சேஷன் ஆரம்பிக்கவிருந்தார்.

ஆனால் சேஷனின் மனைவி தொடர்பான வழக்கு ஒன்றில் சுப்பிரமணியசுவாமி ஆஜராகியிருப்பதால், இந்தவிடயத்தை சேஷன் விசாரணை செய்வது நீதியற்றது என்ற சட்ட அடிப்படையில் பல்வேறு நீதிமன்றங்களிலும் முறையீடு செய்து பிரதம தேர்தல் ஆணையாளர் சேஷனை இந்த விடயத்தை விசாரணை செய்யவிடாது ஜெயலலிதா தடுத்துவந்தார்.

இந்நிலையில் — ஜெயலலிதாவின் ஆட்சிக்காலம் முடிவுற்ற நிலையில் —சேஷனைத் தவிர்த்து புதிதாக நியமிக்கப்பட்ட மேலதிக தேர்தல் ஆணையாளர்கள் இருவரும் இந்த விடயத்தை விசாரித்துத் தீர்ப்புக் கூறலாம் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றது.

அதனடிப்படையில் மேலதிக தேர்தல் ஆணையாளர்கள் டாக்டர் எம். எஸ். கில்லும், ஜி. வி. ஜி. கிருஷ்ணமூர்த்தியும் இந்த மனுவை விசாரிக்க விருக்கின்றனர்.

ஜெயலலிதா பதவியில் இருந்து இறங்கிவிட்டாலும் அவரது ஆட்சிக் காலத்தில் அவர் சட்டமன்ற உறுப்பினராகவும் முதலமைச்சராகவும் இருந்தது சட்ட ரீதியாக செல்லுபடியானதா என்பது இந்த மனு மீதான விசாரணை மூலம் முடிவு செய்யப்படவிருக்கின்றது. (உ-3)

# றோட்டறி ஆதரவுடன் போலியோ சொட்டு மருந்து

## செப். 7இலும் ஒக். 12இலும்

யாழ்ப்பாணம், ஜூலை. 19
இலங்கையில் இருந்து போலியோவை முற்றாக ஒழித்துக் கட்டும் திட்டத்தின் கீழ் றோட்டறிக் கழகத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டுள்ள போலியோ சொட்டு மருந்து கொடுக்கும் தினங்கள் இவ்வருடம் செப்ரெம்பர் 7 ஆம் திகதியும் ஒக்டோபர் 12 ஆம் திகதியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் உள்ள அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பகுதிகளிலும் 200 குழந்தைகளுக்கு ஒரு நிலையம் என்ற அடிப்படையில் போலியோ சொட்டு மருந்து கொடுக்கும் நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் ஒரே தினத்தில் மருந்து வழங்கும் இத்திட்டத்தை சென்ற ஆண்டு முதல் 3 வருடங்களுக்கு நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

## காய்ச்சல் கட்டுப்பாட்டில்

யாழ்ப்பாணம், ஜூலை 19
உரும்பராய் வடக்கில் பரவி வந்த நெருப்புக் காய்ச்சல்தற்போது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் வசித்துவிட்டு பின்னர் மீளக்குடியேற உரும்பராய்க்கு வந்தவேளையில் 30 பேர் வரை நெருப்பு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தனர்.

இப்பகுதியில் கிணறுகள் சுத்தமில்லாமல் இருந்தமையும் இதற்கான காரணமாக இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-4)

# மலேரியா இரத்தப் பரிசோதனை மருந்துக்கு தட்டுப்பாடு நிலவுகிறது

## நுளம்பை அழிக்கும் மருந்தும் வந்து சேரவில்லை

யாழ். பிராந்திய மலேரியாத் தடுப்பு இயக்க ஆய்வு கூடத்தில் மலேரியா இரத்தப் பரிசோதனைக்குத் தேவையான மருந்துக்கு தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் ஆஸ்பத்திரிக்கு காய்சசலுடன் வரும் நோயாளிகளை பரிசோதித்து மலேரியா நோய் பீடித்திருக்கின்றதா என்பதை கண்டறிய முடியாத நிலை இருந்து வருகிறது.

இதேவேளை யாழ். குடாநாட்டில் மழைகாலத்துக்கு முன்னதாகவே நுளம்புகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

அண்மையில் யாழ். வந்திருந்தமலேரியாத்தடுப்புஇயக்க அத்தியட்சகர் இங்குள்ள நிலைமையை அவதானித்த பின்னர் ,மலேரியா இரத்தப் பரிசோதனைக்கு தேவையான [illegible] கருவிகள், நீர்த் தேக்கங்களில் உற்பத்தியாகும் நுளம்பு, குடம்பிகளை அழிக்கப் பயன்படுத்தும் அபேக் மருந்து போன்றவற்றை அனுப்பி வைப்பதாக தெரிவித்திருந்தார்.

ஆனால் இதுவரை இவை யாழ். பிராந்திய சுகதாரத் திணைக்களத்துக்கு வந்து சேரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

## நிழல் படுத்தப்பட்ட கண்ணாடி

# தடையை அமுல் செய்வதில் பொலிஸாருக்குச் சிரமம்

வாகனங்களில் நிழல் படுத்தப்பட்ட கண்ணாடிகள் பொருத்தப்படுவதை தடை செய்வது சிரமமாக உள்ளது என்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நிழல்படுத்தப்பட்ட கண்ணாடிகள் பொருத்தப்பட்ட வாகனங்களில் அநேகமானவை அரசியல் வாதிகளுக்கும், பாதுகாப்பு அதிகாரிகளுக்கும், அவர்களின் உறவினர்களுக்கும் சொந்தமானவையாக இருப்பதே இதற்கு காரணமாகும்.

இதனால் இந்த தடையை அமுல் செய்து பொறுப்பானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது முடியாத செயலாக இருக்கின்றது என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர். (இ-3)

## தொழில்வங்கி

வேலையற்றோருக்கான தொழில்வங்கிப் படிவங்கள் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் மூன்றாவது தடவையாக வழங்கப்பட்டு வருகின்றது. (இ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனைக்குண்டு. 3 H. P என்பீல்ட் தொடர்பு:- மணியம் ஸ்ரோர்ஸ் சாவகச்சேரி. (சி- 2642)

4 கினி கோழிகள், 2 வெள்ளைச் சேவல், 2 கறுப்பு பேடு, 10 கினி கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு ந. வரதராசா, ராஜகோபால்ஸ் களஞ்சியம். (மட்டுவில்) உபதபாற் [கந்தோர் முன்பாக) மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (41823)

வீட்டுத்தளபாடங்கள் உட்பட் சகல விதமான பாவனைப் பொருள்கள், மின்சாதனப் பொருள்கள், HONDA C 70 (First Owner) விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு பார்வையிடலாம். திருமதி வேலாயுதம்பிள்ளை, உப்பு மடச்சந்தி, K. K. S வீதி கோண்டாவில். (41838)

வீட்டு தளபாடங்கள் உட்பட சகல விதமான பாவனைப் பொருள்களும் விற்பனைக்கு உண்டு உடன் தொடர்பு கொள்ளவும். H. I யோசேப், 26, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டுக்குளி யாழ்ப்பாணம். (41856)

## மணிக்கூடு திருத்துதல்

சகல விதமான மணிக்கூடுகளும் சிறந்த முறையில் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். பழுதடைந்த கடிகாரங்கள் உதிரி பாகத்திற்காக வாங்கப்படும். கஜன்ஸ் வாச் வேக்ஸ், 55, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (அரசாங்க வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கு அருகாமை) (41837)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா வாத நோய்கள், வலிப்பு நோய், மாதவிடாய் குத்து குழந்தை வைத்தியம், -லவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். (41747)

## மீண்டும் இயங்குகிறது

கடந்த 140 வருடங்களுக்கு மேல் தீவகத்தில் சேவையாற்றிய பாக்கியம் வைத்திய சாலை மீண்டும் பழைய இடமான K. K. S. வீதியில் மனோகரா சந்திக்கு அருகாமையில் (100 யார் தூரத்தில்) இயங்குகின்றது. நிர்வாகம் Dr. ச. திருக்குமரன். (41785)

## O/L கணிதம்

Disrinction Credit பெறுபேறடைய இதுவரையும் ஆரம்ப அறிவில்லாதவர்களுக்கும் கற்பிக்கப்படும். London Inter ஆசிரியர், 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி (41807)

## தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்கு உகந்த தென்னம் நாற்றுக்கள் (பல இனங்கள்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மு. காங்கேசு, ஐயா கடையடி, கண்டி வீதி, மீசாலை. (41726)

## இசைக்கருவிகள் தேவை

ஆர்மோனியம், ஓகன், கிற்றார், புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகள் தேவை. தொடர்பு: கரவீணா இசை மன்றம், 238, கோவில் வீதி' நல்லூர். (ஆலயத்திலிருந்து 300 யார்) (41782)

## காணவில்லை

எனது சிவப்பு நிற முன் வளைந்த கொம்புடைய யேசி இன பெரிய பசுவை கடந்த வாரம் முதல் காணவில்லை. சிலர் பிடித்துள்ளதாக அறிகின்றேன். கண்டவர்கள் தயவு செய்து அறிவிக்கவும். கவர்ச்சிகரமான சன்மானம் தரப்படும். பொ. சற்குரு பெருமாள் கோவில் பின் வீதி, யாழ்ப்பாணம். (41848)

## மகாதேவா ஜோதிடம்

ஜோதிடர் மகாதேவாவை தினசரி 140, செல்லர் வீதி, (கல்வியங்காட்டுச் சந்தைக்கு அருகாமையில்) எனும் முகவரியில் சந்திக்கலாம். (41783)

## தேவை

வரவேற்பாளர் பதவிக்கு ஆள் தேவை. விபரங்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும். ஸ்ருடியோ நித்ய சித்ரா, சங்கானை. (41825)

## குத்தகைக்கு உண்டு

கண்டி வீதி, நுணாவிலில் அமைந்துள்ள எமது கட்டடம் (முன்னாள் அறவழிப் பயிற்சியகம்) வாடகைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு. தொடர்பு: தலைவர், சாவகச்சேரி லயன்ஸ் கழகம், சகானா புத்தக நிலையம், சாவகச்சேரி. (சி-2644)

## நாவல் கொள்வனவு

பாவித்த நல்ல நிலையில் இருக்கும் தமிழ் நாவல்கள் நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு கொள்ளவும். க. உமாசுதன், 41, தபாலக வீதி, சாவகச்சேரி. (41854)

## கட்டடம் சேதம்

தென்மராட்சி, ஜூலை 18 சாவகச்சேரி பொதுச் சந்தையில் நின்ற பாரிய மரத்தின் கிளை ஒன்று முறிந்து வீழ்ந்ததில் சந்தை கட்டடத்தின் ஒருபகுதி பலத்த சேதமடைந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (இ-117)


# ருலின்ஸ் RUHLINS

எமது சேவைகளை வழமைபோல வழங்கி வருகிறோம்என்பதை வாடிக்கையாளர்கட்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்

இல. 6, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (41841)



# D·M·I

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

இந்து நாகரிகம்
திரு. பாலா

A/L 96
PAPER CLASS
1.00 P m

A/L 97 3.00 P. m
அளவையியல்

A/L 97
குறியீட்டு
அளவையியல்
2.00 P m
திரு. R P. சர்மா

கிறிஸ்தவம்
திருமதி மல்லிகா

ஆரம்பம்:
20-07-96 சனி (41847)


## இரண்டாம் ஆண்டில் நினைவு கூருகின்றோம்

அன்னை மடியில்: 05 – 01 – 1968



ஐங்கரன் அடியில்: 10 – 08 – 1996

# செல்வன் தம்பிஐயா ரவிச்சந்திரன்

திதி: 19 – 07 – 1996

ஆடிச்சதுர்த்தியிலே ஆனந்தமாய் சென்று விட்டாய்
ஆண்டு இரண்டு சென்றதையா ஆறவில்லை
எம் துயரம்
நீண்டு செல்லும் துயரலையை தடுத்து விட
நீ வருவாய்
நீ வரும் நாளை எண்ணி வழியை
விழி பார்த்திருப்போம்
வரும் வழியில் வினை தீர்க்க விநாயகனை
வேண்டிநிற்போம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன் பிரிவால் துயரும்:
குடும்பத்தினர்

''நவேந்திர கிரி''
இணுவில் மேற்கு,
இணுவில். (41799)


# NEW SCIENCE ACADEMY & NEW SCIENCE HALL

KANNATHIDDY, JAFFNA.

# 98 A|L

கணித, விஞ்ஞானப் பிரிவு

★ எமது வழமையான ஆசிரியர் குழுவுடன் இணைந்த ஆசிரியர்களும் ★

ஆரம்பம்:- 21 – 07 – 96
SUN — 8.00 A.M (சி 2674)



# QUICK PHOTO

## மீண்டும் யாழ். நகரில் ஆரம்பம்

மணிக்கூட்டு வீதி, யாழ் நகரில் இருந்த எமது ஸ்தாபனம் கீழ்க் காணும் முகவரிகளில் தற்காலிகமாக இயங்குகின்றது.

கலர்ப்படச் சுருள்களை கழுவ விரும்புபவர்களும், எமது வாடிக்கையாளர்களும் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

| | |
|---|---|
| **அஜந்தா** | **தவமணி** |
| பேரட்டோ&வீடியோ, 63, சங்கிலியன் வீதி. நல்லூர். | மான் ஸ்கூல் லேன், உடுவில். |

(41857)


# மெதடிஸ்த திருச்சபை

யாழ்ப்பாணம்

மெதடிஸ்த திருச்சபையின் பரி. பேதுரு ஆலயத்தின் ஞாயிறு ஆராதனை 21-07-96 ஞாயிறு முதல் மீண்டும் ரிம்மர் மண்டபத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகிறோம்.

காலை 8 மணிக்கு (பழைய நேரம்) ஆராதனை ஆரம்பமாகும்.

முகாமைக்குரு
எஸ். எஸ். கருணைராஜ்
(சி/2648)

## 91ஆம் நாள்

# கண்ணீர்ப் பூக்கள்

மண்ணகம்: 28 – 10 – 1947

விண்ணகம்: 19 – 04 – 1996

அமரர்

# சீவரத்தினம் சிவசுப்பிரமணியம்

(கட்டடத் திணைக்கள பிரதான பொறியியலாளர் அலுவலக ஊழியர்)

பாசத்தைப் பொழிந்து அன்பாக வளர்த்திட்டு
நேசமுடன் ஒரு வார்த்தை கூறாது
எம்மைத் தவிக்க விட்டு எங்கு சென்றீர்கள்
வாழ்வான வாழ்வை விரும்பும் வையகத்துள்
நீங்கள் மட்டும் ஏனப்பா
விண்ணுலகை விரும்பி சென்றீர்கள்
ஊரே ''மணியம்'' என்னும் நாமத்தால்
உங்கள் பெயரை உச்சரிக்க - நாங்கள்
உங்களை ''அப்பா'' என ஆசையுடன்
கூறமுடியாதவாறு
எம்மை அனாதை ஆக்கி விட்டு எங்கு சென்றீர்கள்-
அப்பா
நடமாடும் வீட்டினில் படமாகி விட்டீர்கள்
உங்களை உருக்கி எங்களை உருவாக்கிய
எமதருமை அப்பாவே - உங்களது ஆன்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் துயரால் வாடும்
அன்பு மனைவி, மகன், மகள்,
மருமகள், பேத்தி.

தகவல்:-
செல்வி சுகிதா சிவசுப்பிரமணியம்
கண்டி வீதி,
கைதடி நுணாவில்
சாவகச்சேரி. (41793)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# அமுக்கி வாசிப்போர்!

இந்திய மந்திய அமைச்சராகப் பதவியேற்றிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முரசொலி மாறன், ஈழத் தமிழர் விவகாரம் சம்பந்தமாக ''குமுதம்'' வார சஞ்சிகைக்கு செவ்வி அளித்திருக்கிறார், அதனை உதயனில் மறுபிரசுரம் செய்திருந்தோம்.

இந்த விவகாரத்தில் தமிழகத்தில் ஆட்சிப்பீடம் ஏறியுள்ள கருணாநிதி தலைமையிலான தி. மு. க. அரசு மெதுவாக நழுவிக்கொள்ளும் என்பதனை அவாது செவ்வி தொட்டுக் காட்டுகிறது.

ஈழத் தமிழர்கள் தமிழக மக்களை தங்களது மூத்த சகோதரர்களாகவே நீண்ட காலமாகக் கருதி வந்தார்கள். தாங்கள் நடத்தும் உரிமைப் போராட்டத்துக்கு அவர்களது உதவிக்கரம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள்.

வேறெந்த வகை உதவி இல்லையெனினும் அவர்களது தார்மீக ஆதரவு தமக்குப் பக்கத் துணையாக, மனப்பலத்தைத் தருவதாக அமையும் என்று நம்பினார்கள்.

ஆனால் தமிழக அரசியல்வாதிகள் ஈழத் தமிழர் விவகாரத்தை தமக்கு அரசியல் லாபம் தேடித் தரும் பண்டமாக்கி, சில காலம் வெளுத்து வாங்கினார்கள்.

தமிழகத்து மக்களிடம் ஈழத்தமிழர் ஆதரவு உணர்வலைகள் தொடர்ந்து இருக்கும் போதிலும், தமிழக அரசியல்வாதிகள் அதுவிடயத்தில் புறக்கணிக்கும் போக்கைக் கடைப்பிடித்தனர். ஈழத் தமிழர் விவகாரத்தில் ஈடுபாடு அல்லது அக்கறை காட்டினால் தமக்கு அரசியலில் ஆபத்தை விளைவிக்கும் என்று கருதினார்கள். புதுடில்லியில் உள்ள உயர்மட்ட அரசுத் தலைவர்களின் பகைமையைத் தேடிக்கொள்ள நேரிடும் என்று அவர்கள் அஞ்சினார்கள்.

ஆகையால் தமிழக அரசியல் தலைவர்கள் ஈழத் தமிழர் விவகாரத்தில் பெரிதாக அக்கறை கொள்ளமாட்டார்கள் என்ற பொதுவான கருத்து ஈழத் தமிழரிடம் பதிந்து விட்டது.

எனினும் தி. மு, க. தமிழகத்தில் ஆட்சி அமைத்ததோடு மட்டுமின்றி, மத்தியில் உள்ள அரசில் பங்கு கொண்டு அமைச்சர் பதவிகளும் பெற்றுக் கொண்டதால் —

தி. மு. க. தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, மத்திய அரசின் ஊடாக ஸ்ரீலங்கா அரசு மீது ஓர் அழுத்தம் கொடுக்க உதவ முடியும் என்று கருதினார்கள். தி. மு. க. தலைவர்களிடம் மன மாற்றம் வராதா, எங்களுக்கு உதவமாட்டார்களா என்று அலமலக்கின்றனர்.

அது இயலாது; ஆகாது. நீங்களே உங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளுங்கள். எமது நல்லெண்ணம் என்றும் இருக்கும் என்று சினிமாப் படத்துக்கு திரைக்கதை, வசனம் எழுதுவது போலச் சப்புக்கொட்டுகிறார் முரசொலி மாறன்.

ஈழத்தமிழர் விவகாரத்தில் சற்றுத் தீவிரம் காட்டியதால் ஒன்றல்ல இரண்டு தடவைகள் சிம்மாசனத்தை தி. மு. க. இழந்தது. அதனால் அக்கட்சித் தலைவர்கள் இப்போது அமுக்கி வாசிக்க விரும்புகிறார்கள்; தாம் தப்பிக்கொண்டால் சரி என்ற தோரணையில்! உறவு என்றால் தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்பது இவர்கள் மட்டில் பொய் தானா?

# யாழ். – திருமலை கப்பல்களுக்கு இந்தியா மறைமுகமாக பாதுகாப்பு?

மணிலா, ஜூலை 19

யாழ்ப்பாணத்துக்கும், திருகோணமலைக்கும் இடையில் கடல் மார்க்கமாகச் செல்லும் இலங்கைக் கப்பல்களுக்குபாதுகாப்பு அளிக்கும் விதத்தில் இந்திய கடற்படைக் கப்பல்கள் பாதுகாப்பு கவச அரண் போலச் செயற்பட்டு வருவதாக இலங்கை வட்டார இரகசியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்கண்டவாறு வெரித்தாஸ்வானொலி தெரிவித்தது

விடுதலைப் புலிகள் இயக்கமும், நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் இதனைச் சுட்டிக் காட்டியது என்றும் வெரித்தாஸ் தெரிவித்தது.

இலங்கைத் தமிழர் பகுதிகள் மீது இராணுவம் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு இந்தியா பல பின்புலவசதிகள் செய்து கொடுத்து வருகிறது என்ற வலுவான ஐயப்பாடு சமீபகாலமாக இருந்து வருகின்றது.

''இராணுவ இன்ரலிஜன்ஸ்'' எனப்படுகின்ற உளவுத் தகவல்கள் சேகரிப்பதிலும் —

இராணுவ வியூகங்கள் அமைப்பதிலும் —

வெளிநாடுகளுடன் பேசி இலங்கைக்கு ஆயுதங்கள் ஏற்பாடு செய்வதிலும் —

சர்வதேச கடல் பகுதிகளில் போராளிகளை தீவிரமாகக் கண்காணிப்பதிலும் இந்தியா இலங்கைக்கு உதவி வருவதாகக் கூறப்படுகிறது.

இப்படிவெரித்தாஸ் மேலும் தெரிவித்தது. (இ-3)

# பரீட்சை முடிவுகள்

குருநகர், ஜூலை 19

1994ஆம் ஆண்டில் கனிட்ட தொழில் நுட்ப சான்றிதழ் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகள், யாழ். கல்வித் திணைக்களத்தினால் உரிய கோட்டக் கல்வி அலுவலகங்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் உரிய கோட்டக் கல்வி அலுவலகங்களில் பெறுபேறுப் பட்டியல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ். கல்வித்திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-5)

# நிலம் கொத்தியவர் மிதி வெடியில் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஜூலை 19

நிலத்தை துப்புரவு செய்து கொண்டிருந்த வேளை மிதிவெடியில் மண்வெட்டி பட்டபோது அது வெடித்தது. இதனால் ஒருவர் படுகாயமடைந்தார்.

வரணி குடமியன் பகுதியில் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த மார்க்கண்டு சிவகுமார் (வயது 17) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

# குடியேற்றத்தை நிறுத்த கூட்டணி கோருகிறது

கொழும்பு, ஜூலை 19

அம்பாறை மாவட்டத்தில் சிராய்க்கேணி பகுதியில்இடம் பெற்று வரும் அத்து மீறல் குடியேற்றங்களை நிறுத்தும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதியிடமும் அமைச்சர் டி எம். ஜயரத்தினாவிடமும் கேட்டிருக்கிறது.

இது சம்பந்தமாக இருவருக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என மாவை சேனாதிராசா தெரிவித்தார். (இ-3)

# ஒலிம்பிக் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன

## அட்லாண்டா விழாக் கோலம்

இருபத்தாறாவது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் அட்லாண்டா நகரில் இன்று நள்ளிரவு ஆரம்பமாகின்றன.

அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் போட்டிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பார்.

ஒலிம்பிக் விளையாட்டை முன்னிட்டு அட்லாண்டா நகர் கோலாகலம் கண்டு நிற்கிறது.

197 நாடுகளைச் சேர்ந்த வீரர்களும், வீராங்கனைகளும் போட்டியில் பங்குபற்ற அட்லாண்டா வந்து சேர்ந்துள்ளனர்.

கடந்த பார்சிலோனா ஒலிம்பிக் போட்டிகளைவிட 28நாடுகள் இந்தமுறை அதிகமாக கலந்து கொள்கின்றன. (இ-3)

# மோட்டார் வாகனங்களை பதிந்தாலே எரிபொருள்

யாழ். செயலக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் மோட்டார் வாகனங்களுக்கான தற்காலிக ஊர்திப் பதிவுகள் மேற்கொள்ளும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

மோட்டார் வாகன உரிமை மாற்ற படிவம் (எம். ரி. ஏ. 6 ஆர். ) வைத்திருப்பவர்கள் இதன் மூலப் பிரதியுடன் நிழற்படப் பிரதியை சமர்ப்பிப்பதன் மூலம் தற்காலிக பதிவுகளை மேற்கொள்ளலாம்.

இதேவேளை, மோட்டார் வாகன உரிமை மாற்றப்படிவம் இல்லாதோர் வாகனம் தங்களுடையது என்பதை நிரூபித்தல் வேண்டும். பொலீஸ் அத்தாட்சி, சத்தியக் கடதாசி ஆகியவை கொண்டு வாகனம் சொந்தமானது என்பதை நிரூபிக்க முடியும்.

மேற்குறிப்பிட்ட ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்போது, வாகன இலக்கம் இயந்திர அடிச்சட்ட இலக்கம் கடைசியாகப் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் பெயர் உள்ளடக்கி இருத்தல் வேண்டுமென மோட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பதியப்பட்டு, இந்த ஆண்டுக்கான வரி செலுத்திய வாகனங்களுக்கே எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

# இரகசியம் அறிவதற்காக பிரிக்கப்படும் கடிதங்கள்

கொழும்பு, ஜூலை 19

யாழ்ப்பாண மக்களுக்கு வரும் கடிதங்கள் மட்டும் தான் உடைக்கப்பட்டுச் சோதனை செய்யப்படுவதாக நினைக்காதீர்கள்.

அரசியல் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் உயர் அரச அதிகாரிகள் தமக்கு வேண்டியவர்களுக்கு உத்தியோக ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் அனுப்பும் கடிதங்களும் உடைக்கப்படுகின்றன.

தேசிய உளவுப் பிரிவினர் அரச தலைவர்கள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் ஏனையோருக்கு அனுப்பும் தபால்களைப் பிரித்துப் பார்த்து —

அவற்றில் உள்ள முக்கிய தகவல்களைக் குறிப்பெடுத்துக் கொண்டு பின்னர் ஒட்டி அனுப்பிவிடுகிறார்களாம்.

கடிதங்கள் உடைக்கப்பட்டது தெரியாமல் இருப்பதற்காக, தேசிய உளவுப் பிரிவினர் அவற்றின் மீது நீராவியைப் பிடித்து உரித்து பிரித்து விடுவதாகவும் —

பின்னர் நன்றாகப் பசையிட்டு ஒட்டி அனுப்பி வைப்பதாகவும் சொல்லப்படுகிறது.

அரசியல் தலைவர்கள் மற்றும் முக்கிய புள்ளிகளின் 247 கடிதங்கள் நாளாந்தம் சராசரி பிரித்து இரகசியம் அறியப்படுவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவற்றில் உள்ள முக்கிய இரகசியத் தகவல்கள் அரசின் உயர் தலைவருக்குத் தெரிவிக்கப்படுகின்றனவாம். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயம் என்பது வாழ்க்கையே

ஆத்மஞானம் பெறுவதே நம் வாழ்க்கையின் தலையாய நோக்கமாகும்.

இன்பத்தை அடைவதும் துன்பத்தைச் சுவைப்பதும் வாழ்க்கையின் நோக்கமாகா.

ஒருவன் எந்த நிலையில் இருந்தாலும் அவன் இந்த ஆத்மஞானத்தைப் பெறும் வகையில் பணி செய்து வாழப் பழக வேண்டும். அவன் துறவியாக இருக்கலாம். இல்லறத்தில் ஈடுபட்டு வாழலாம் ஒவ்வொரு கணமும் தன் வியாபாரத்தில் மனதைச் செலுத்தி வாழும் வணிகனாகவோ, பாடம் கற்கும் மாணவனாகவோ இருக்கலாம். ஞானம் என்றநிலையை நோக்கி அவன் ஒவ்வொரு கணமும் அடியெடுத்து வைப்பதிலேயே நோக்கமாக வாழப் பழக வேண்டும்.

நமது அன்றாட வாழ்க்கை வேறு, சமயம் என்பது வேறு என்றே பொதுவாக மக்கள் நினைக்கிறார்கள்.

ஆனால் அது மெய்யல்ல.

வாழ்க்கையையும் சமயத்தையும் தனித்தனியாகப் பிரிக்கவே இயலாது. இதைத் தெளிவாக்கவே தோன்றியது போல் பகவத்கீதை வெறுப்பும் சினமும் கொந்தளிக்கும் போர்க்களத்தில் உபதேசிக்கப்பட்டது.

அங்கு விழிப்புடன் இல்லாமல் நேரத்தை வீணாக்குவது அறிவுடைமையாகாது. மனிதனின் தாழ்ந்த இயல்புகளெல்லாம் சற்றும் நாணமில்லாமல் வெளியே வந்து போரிடத் தயாராக இருக்கின்றன.

## ஞானக்கதிர்

இந்த நிலையிலும் மிகவும் உயர்ந்த ஆன்மீகக் கொள்கைகளை எடுத்துச் சொல்ல முடியும் என்றால், மற்ற நிலைகளில் இவற்றை எடுத்துக் கூறுவது மேலும் பொருத்தமுடையதே, அல்லவா?

எல்லோருக்கும் பயன்படாத சமயத்தால் உலகத்திற்குப் பயனில்லை. மக்களில் ஒரு சாரார் அமைதியான இன்ப வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்க, மற்றொரு பிரிவினர் துயரில் மூழ்கி இருப்பதைச் சமய நூல்கள் ஏற்குமா?

உண்மையான மதம் எல்லோராலும் எந்நிலையிலும், இல்லறத்திலும் துறவறத்திலும் பின்பற்றத் தக்கதாக இருக்க வேண்டும்.

அனைவரையும் ஒரே இடத்திற்கே அழைத்துச் செல்ல நினைக்கும் நமது சமயம் கற்பிக்கும் தத்துவம் இதுவே:-

''மனிதனே, நீ உன்னைப் பயனற்ற துரும்பாகவே எண்ணிக் கொண்டிருக்கலாம். உடலைப் பெற்று அதன் மூலமாக இன்பதுன்பங்களைச் சுவைப்பதும், முடிவில் இறப்பதும் உன் விதி என்று நீ நினைக்கலாம். ஆயினும் நீ அழிவற்றவன். மாறுதலின்றி என்றும் நீயாகவே இருந்து வருவாய்!''

ஆன்மீகத்தின் குரலாகிய பகவத்கீதை கூறுகிறது;

''ஆன்மா கொல்வதாகவோ கொல்லப்படுவதாகவோ நினைப்பது தவறாகும். ஆன்மாவின் தன்மையை உணராதவர்கள் இழைக்கும் தவறு இது'' (2-19)

''ஆன்மா பிறப்பதுமில்லை; இறப்பதுமில்லை.'' (2-20.)

ஆன்மா பிறப்பிறப்பற்றது; அழிவற்றது; மாறுபாடு அற்றது; அவ்வாறு அறிபவன் யாரைக் கொல்ல முடியும்? யாரால் கொல்லப்படத் தான் இயலும்?'' (20- 21)

அத்தகையவன்- ஆன்மாவின் தன்மையை உண்மையாக அறிந்தவன்- ஏதும் செய்வதில்லை. இறக்கும் வரை அவனது உடலும் மனமும் இயந்திரம் போல இயங்கிவரும். நற்செயல்கள் உதவிகள் போன்றவற்றை அவன் இயல்பாகச் செய்வான்.

சுவாமி சாரதானந்தர்

தன்னுணர்வு தோன்றியதும் (ஆத்மஞானம் ஏற்பட்டதும்) அவன் சுக துக்கங்களைத் தாண்டிச் செல்கிறான்.

ஆகவே ஒருவன் ஒரு சூழ்நிலையில் என்ன செய்வதென்பதே விளங்காமல் திகைத்து மனம் வருந்தி நிற்கும் சமயத்தில், அவனுக்குத் தன்னுணர்வை உண்டாக்குவது ஒன்றே பயன் தரத்தக்க வழியாகும்.

அர்ஜுனன் பல வகைகளில் சிறந்தவனே என்றாலும், துயரின் வாய்ப்பட்டு நிற்கையில் அவனைக் காக்க ஆத்மாவைப் பற்றிய ஞானம் ஒன்றே வழி என்பதைக் கீதை தெளிவுபடுத்துகின்றது.

துயர், மதிமயக்கம், அறிவீனத்தின் காரணமாக ஏற்பட்ட பலவீனம் இவற்றை நீக்க இறைவனின் விசுவரூபத்தைக் காண்பதுவே ஒரே வழி என்பதையும் கீதை நமக்கு அறிவுறுத்தும்; இத்த உலகளாவிய பெருவடிவத்தைக் காண்பதால் இறைவனின் பெருமையும் நமது சிறுமையும் நமக்குத் தெளிவாகின்றன; 'அவனது கையில் அகப்பட்டு, அவன் கருத்துப் போல் ஆட்டிவைக்கப்படும் ஒரு பொம்மையே நாம்' என்ற உண்மையும் புலப்படுகிறது. ★

# புலிகள் நடத்தியது மரபுவழி யுத்தம்

''முல்லைத்தீவில் புலிகள் நடத்தியிருப்பது கொரில்லா முறையிலான யுத்தமல்ல; மரபு வழி யுத்தமாகும்.''

— இவ்வாறு பி. பி.ஸி. சிங்கள சேவைக்கு தகவல் வெளியிட்டார் பிரபல இராணுவ ஆய்வாளரும் ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகையின் பாதுகாப்புச் செய்தியாளருமான இக்பால் அத்தாஸ்.

அவர் மேலும் கூறியதாவது:-

யாழ் குடாநாடு கைப்பற்றப்பட்டவுடன் புலிகளின் முதுகெலும்பு ஒடிக்கப்பட்டு விட்டது என பாதுகாப்பு அதிகாரிகள் செய்த பிரசாரத்தை இத்தாக்குதல் பொய்ப்பித்து விட்டது.

வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் இணைக்கும் பிரதேசத்தில் அமைந்துள்ள இம் முகாம் மீது புலிகள் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.

இராணுவத்தைப் பொறுத்தவரை இது ஒரு முக்கியமான முகாம் ஆகும்.

சுமார் 2, 3 மாதங்களுக்கு முன்னர் இந்த முகாம் பற்றி பாதுகாப்பு அதிகாரிகளிடையே இருவேறு கருத்துக்கள் நிலவின.

இந்த முகாமை அகற்றி இதற்குத் தென்புறத்தில் அமைந்துள்ள கொக்குத்தொடுவாய் முகாமுடன் இதனை இணைப்பது நல்லது என ஒரு சாரார் கருதினர். ஆனால் இந்த முகாமைத் தொடர்ந்து பேண வேண்டும் எனமறு தரப்பார் கூறினர்.

யாழ். குடாநாட்டைக் கைப்பற்றியதுபோல எப்போதாவது கிளிநொச்சி, வன்னிப் பகுதிகளைக் கைப்பற்ற நேரின் இந்த முகாமுடன் அண்மையிலுள்ள ஆனையிறவு முகாம் போன்ற முகாம்களை இணைத்து புதிதாகக் கைப்பற்றும் பகுதிகளை ஸ்திரப்படுத்தலாம் என்பதே அவர்களின் வாதமாக இருந்தது. இக்காரணத்தினாலேயே இந்த முகாம் அகற்றப்படவில்லை— என்றார்.

# வன்னி இராணுவ நடவடிக்கையை தடுப்பதற்கே இந்தத் தாக்குதல்

மிகவிரைவில் வன்னியை நோக்கி ஒரு படை நகர்வை மேற்கொள்வதற்கு அரசு உத்தேசித்திருக்கின்றது. அதைத் தடுக்கும் முகமாக முல்லைத்தீவு முகாம் மீது இப்பெரும் தாக்குதலை புலிகள் நடத்தியிருக்கலாம் என நினைக்கின்றேன்.

— கொழும்பு இராணுவ ஆய்வாளர் சிவராம் (''தராக்கி'') பி. பி. ஸிக்கு இவ்வாறு கருத்து வெளியிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

இத்தாக்குதல் அரசுக்கு நிச்சயமாக அரசியல் ரீதியான பின்னடைவாக இருக்கப் போகிறது. அதில் சந்தேகம் இல்லை.

யாழ்ப்பாண வெற்றியின் பலாபலன்கள் சிதைந்து கொண்டு வந்திருக்கின்றன. இது அந்த பலாபலன்களை மேலும் தகர்க்கும்,

வன்னியை நோக்கிய படை நகர்வுத் திட்டமும் இதனால் பெரிய அளவில் பாதிக்கப்படலாம்.

புலிகளின் அரைவாசிப் பலத்தை அழித்து விட்டதாக அரசும் இராணுவமும் கூறி வந்தன.

யாழ் மீதான தாக்குதலுடன் புலிகள் பலவீனப்பட்டிருப்பார்கள்; அவர்களால் இனி பாரிய படை நகர்வுகளை செய்யமுடியாது என்று அரசு கருதி இருந்தது; நம்பி இருந்தது அதனால்தான் அரசுக்கு இந்நிலை ஏற்பட்டது.

புலிகளுக்கு ஆயுதங்கள் கிடைக்கும் வளங்கள் தடைப்பட்ட நிலையிலும் —

வேறு நாடுகளிலிருந்து புலிகள் ஆயுதங்களைக் கொண்டு வருவதை இந்திய அரசு தடுக்கும் என்ற நம்பிக்கையிலும்—

இந்தளவுக்கு பெரியளவு ஆயுதங்களைப் பயன்படுத்தி இது போன்ற தாக்குதல்களைப் புலிகளால் மேற்கொள்ளமுடியாது என்று அரசு ஓரளவு நம்பிக்கை வைத்திருந்தது.

இத்தாக்குதலின் போது நிரம்ப ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றியிருப்பார்கள் என்று தெரிகின்றது.

அரசு இராணுவத்துக்கு ஆட்சேர்க்கும் முயற்சியிலீடுபட்டிருக்கும் போது இந்தத் தாக்குதல் நிகழ்ந்திருப்பதால் அந்த முயற்சியும் பெரிதும் பாதிப்படையும்.

முல்லைத்தீவுக் காடுகள் புலிகளுக்கு நன்கு பரிச்சயமானவை. அங்கு இந்திய அமைதிப்படையால் கூட புலிகளைத் தோற்கடிக்க முடியவில்லை. இதுவும் இத்தாக்குதலில் புலிகளின் கைகள் ஓங்கியதற்கு ஒரு காரணம் — இவ்வாறு சிவராம் மேலும் கூறினார்.

# தெல்லிப்பழை செயலர் பிரிவு நிவாரண பொருள்

வலி-தெற்கு, ஜூலை. 19

தெல்லிப்பழை பிரதேசச் செயலர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்து, வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் தங்கி வாழ்ந்து வரும் மக்களுக்கு தொடர்ச்சியாக நிவாரண உணவுப் பொருள்கள் விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மல்லாகம்-அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றை சேர்ந்த குறிப்பிட்ட கிளைகள் மூலம் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் திரு. ஆ. மகாலிங்கத்தின் மேற்பார்வையின் கீழ் நிவாரண உணவுப் பொருள் விநியோகம் நடைபெறும்.

(அ-152)

## முல்லை முகாம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிற்று என்று தெரியவில்லை என செய்தி ஏஜென்ஸிகள் நேற்று மூற்பகலில் தெரிவித்த போதிலும் —

முகாமை மீண்டும் இராணுவத்தினர் தமது முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து விட்டதாக ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் நேற்று மாலையில் அறிவித்தன.

தாக்குதலுக்கு இலக்கான படையினருக்கு உதவுவதற்காக கடல் வழியாகவும் வான் வழியாகவும் உதவும் படை அணிகள் உடனடியாக அனுப்பப்பட்டதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

முகாமுக்குள் இருக்கும் ஒரேயொரு விமான இறங்கு தளத்தில் கடும் சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்ததாகவும் —

உதவும் படைகளை அங்கு இறக்கவோ அல்லது காயமடைந்தவர்களை வெளியே எடுத்துவரவோ முடியவில்லை என்றும் —

உறுதிப்படுத்தாத தகவல்கள் தெரிவித்ததாக பி.பி.ஸி. முதலில் தெரிவித்தது.

புலிகள் தாக்குதல் தளத்தை விட்டு அகன்ற பின்னரே விமானம் மூலம் அனுப்பப்பட்ட கூடுதல் படைகள் தளத்தைச் சென்றடைந்ததாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு தளத்தில் உள்ள படையினருக்கு உதவுவதற்காக மேலதிக துருப்புகள் ஹெலிகள் மூலம் நேற்று மாலை அனுப்பப்பட்டன என்றும்—

முகாமுக்கு அருகில் உள்ள புலிகளின் மறைவிடங்கள் மீது விமானப் படையினர் தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருவதாகவும் இலங்கை வானொலி அறிவித்தது.

முகாமில் உள்ள படையினருக்கு உதவுவதற்காக கடல் வழியாகச் சென்ற கடற்படை அணியும் கடற்புலிகளின் கடும் எதிர்ப்பை எதிர்கொள்ளவேண்டியிருந்ததாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவு நோக்கி வந்து கொண்டிருந்த கடற்படையினரின் எட்டுக் கடற் கலங்கள் மீது கடற்புலிகளின் அதிவேக விசைப்படகு தாக்குதலை மேற்கொண்டதாகவும் —

இத்தாக்குதலில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாகவும் —

கொழும்பு இராணுவப் பேச்சாளர் ஒருவரை மேற்கோள்காட்டி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

## நூற்றுக்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சரியான தகவல்களை உடனுக்குடன் வெளியிட முடியாத நிலையில் கொழும்பு இராணுவ அதிகாரிகள் இருந்ததாக செய்தி நிறுவனம் ஒன்று குறிப்பிட்டது.

தற்போது ஒரு சிறு வானொலித் தொடர்பு ஏற்பட்டுள்ள போதும் நடந்து வரும் நிகழ்வுகள் பற்றி தெளிவாக எதுவும் தெரியவில்லை என்று பி.பி.ஸி. நேற்றிரவு குறிப்பிட்டது.

இருதரப்பிலும் ஏற்பட்ட உயிர்ச் சேதங்கள் குறித்து ஊர்ஜிதமான தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

## சசிகலாவை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரித்து வரும் சென்னை பெருநகர கூடுதல் மாஜிஸ்திரேட் பி. முத்துச்சாமி நேற்று உத்தர விட்டார்.

நேற்றுக்காலை திருமதி சசிகலா நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். (இ-3)


## ஸ்ரீ ஐயப்பதாசக் குருக்களுக்கு

யப்பான் சர்வதேச பல்கலைக்கழகம் கௌரவ

## 'டாக்டர்' பட்டமளித்து கௌரவிப்பு

கொழும்பு, ஸ்ரீ சபரிமலை சாஸ்தாபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாசன் சாம்பசிவ சரவணபவக் குருக்கள் அவர்களுக்கு யப்பான் சர்வதேச பல்கலைக்கழகம் சமூக, சமய சேவையைப் பாராட்டி கௌரவ டாக்டர் பட்டம் அளித்து கௌரவித்துள்ளது இவர் அகில இலங்கை பிராம்மண சமாஜம். இந்து கலாசார முத்தமிழ்ச் சங்கம், இலங்கை சர்வமத சமாதானச் சங்கம் ஆகியவற்றின் தலைவரும், இலங்கை இந்துமத பீடாதிபதி ஸ்கந்த - சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் புதல்வரும், வில்லிசைக் கலைஞர் S. S. சர்மா அவர்களின் சகோதரரும், யாழ்./நாயன்மார்கட்டு மகேஸ்வரிவித்தியாசாலையின் பழைய மாணவரும் ஆவார்.

சாம். சோமாஸ்கந்த சர்மா, நல்லூர்

(41850)



## POST OF CONFIDENTIAL-SECRETARY

A well established Organisation in Jaffna requires the services of a Confidential Secretary to the Managing Director.

Applications are invited from both Males and Females over 45 years of age and be fluent in English/Tamil with an acceptable speed of Short hand and Typing, able to handle correspondence, documentation, filing and other requirements related to the above post independantly.

Computer literacy would be an added qualification.

**Applications close on 25 th July 1996.**

**Apply: P. O. Box NO. 23**
**Jaffna.**



மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டம்
துர்க்காபுரம்

## ஸ்ரீ ஞான துர்க்கை அம்பாள் ஆலய ஆடிப்பூர விழா

ஆடிப்பூர ருதுசாந்தி விழாவும், திருவிளக்குப் பூசையும் 5 ஆம் திகதி சனிக்கிழமை (20 - 07 - 96) நடைபெறும் என்பதை அம்பிகை அடியார்களுக்கு அறியத் தருகிறோம்.

இங்கனம்,
ஆலய தர்மகர்த்தா,
சி. நவரத்தினம்

(41821)



# விசேஷ ஆராதனைகள்

இடம்: இலங்கை பெந்தெகொஸ்தே சபை
111, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

நேரம்: தினமும் மாலை 3.30 மணிக்கும்
காலை 9.00 மணிக்கும்

காலம்: 1996 ஜூலை மாதம் 19 முதல் 21 வரை
ஞாயிறு காலை ஆராதனையுடன் முடிவடையும்

**பாவம், பயம், நோய், புகைத்தல், பேய், பில்லிசூனியம், மதுபானம், தீயபழக்கங்கள், விரக்தியிலிருந்து விடுதலை தர "இயேசு கிறிஸ்து" வல்லவராயிருக்கிறார்.**

## இலவச உட்பிரவேசம்

யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

வியாதியஸ்தருக்காக ஜெபிக்கப்படும்.

அநாதி தேவனே உனக்கு அடைக்கலம் (உபா 33;27)

(41862)


மரண அறிவித்தல்கள்
2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 19-07-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org